புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# வள்ளுவமும் காதலும்

*முனைவர் ப. கோமதி சுப்பிரமணியம்*
*தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர்*
*நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*ஈரோடு-52*

*ஆய்வுச் சுருக்கம்*

*உலக உயிர்களுக்கு இன்பம் பல வழிகளில் பல அமைவுகளில் பல கோணங்களில் உண்டாகும் எண்ணுதல், மொழிதல். வினைதல், உண்ணுதல், உறங்குதல், இன்புறுதல், அருளுதல், கூடுதல், புணர;தல், காதலித்தல், காமுறுதல் போன்ற அமைவிடம் இன்பம் வெளிப்பட்டு உயிர்களை மகிழச் செய்யும். உலக உயிர்கள் எல்லாம் இனிமையுடன் வாழ்ந்து, மிகச் சிறப்பான இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்பதே திருவள்ளுவரின் விழைவு இலக்கு நோக்கு ஆகும். இத்தகைய உயரிய நோக்கில்தான் திருக்குறளை இயற்றி, உலகிற்கு அருளியுள்ளார்*

*இன்பம் ஏற்படுவனவற்றுள் காமம் என்னும் கூறு, உயர;நிலை இன்பமாக தெய்வீக இன்பமாக அமிழ்த இன்பமாக தலைமை சான்ற இன்பமாகக் கொண்டுள்ளார் திருவள்ளுவர் அக்காம இன்பத்தைத் தூய்மையான காதல்வழி, மென்மையான காதல்வழி, தலைசிறந்த புனித காதலர்களைக் கொண்டு அறிமுகம் செய்துள்ளார் புதுமையான காதல் பற்றி காதல் மலரின் மென்மையானக் காதல் உள்ளதால் ஒன்றிய நுட்பக் காதல், நிலைப் பேற்று உடைய காதல், உயிர் காதல் போன்ற அமைவில் அறிமுகம் செய்து தூய்மையான காதல் இன்பத்தை நுகரச் செய்துள்ளார்*

*திறவுச் சொற்கள்*

*முன்னுரை*
*தலைவன் தலைவி*
*இல்லறம்*
*வள்ளுவனின் காதல்*
*முடிவுரை*

*முன்னுரை*

*நீதி நூல்களுள் தலையானது திருக்குறள். முதல் அடி நான்கு சீரும், இரண்டாம் அடி மூன்று சீரும் உடையதாய் வரும். இரண்டு அடி வெண்பாவுக்குக் குறள் வெண்பா என்று பெயர;. அந்தக் குறள் வெண்பாவால் இயற்றப்பட்ட நூலுக்குத் திருக்குறள் என்ற பெயரே நின்றது. பல நூற்றாண்டுகளுக்கு முன் விளங்கிய ஒருவர் எல்லாச் சமயத்தாரும் போற்றக்கூடிய வகையில் எல்லோருக்கும் பொதுவான ஒரு நூல் எழுதியிருப்பது வியப்பாகும். இந்நூல் அறம்,பொருள்,இன்பம் என்னும் முப்பாலையும் அழகாக எடுத்துறைக்கிறது. வாழ்க்கையின் அனைத்து பகுதிகளையும் எடுத்துரைக்கும் ஒரு சிறந்த வாழ்வியல் நூலாகும். சாதி,மதம், மொழி,நாடு என்று வேறுபாடு இல்லாமல் மக்கள் அனைவருக்கும் பொருந்துவதாக உள்ளதால் உலக பொதுமறை என்று அழைக்கப்படுகிறது.*

*திருக்குறளில் உள்ள ஒவ்வொரு குறளும் நமக்கு வாழ்வியல் அனுபவத்தை அள்ளித்தருகின்றது. காமம் என்றால் ஆண் மீது பெண்ணிற்க்கும், பெண் மீது ஆணிற்க்கும் உள்ள காதல் தான் என்று தோன்றும். ஆனால் பெரியோர;கள் அதாவது தவத்தில் உயர;ந்த நிலை நோக்கிப்பயணம் செய்பவர்கள் மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள காதல் என்றும்*

*சொல்லப்படுகிறது. அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் சொல்லப்பட்டது போலவே அருமையான, இனிய, காதல் மற்றும் இல்லற வாழ்விற்குச் சுவைதரும் பல செய்திகள் காமத்துப்பாலிலும் சொல்லப்பட்டுள்ளன. காமத்துப்பாலில் தான் வள்ளுவப் பேராசானின் கற்பனைத் திறனும், காட்சிகளை நாடகப் பாங்கில் நம் கண்முன் நிறுத்தும் ஆற்றலும், ஏன்அவரின் மெல்லிய நகைச்சுவை உணர;வும் சிறப்பாக வெளிப்படுகின்றன எனலாம். அவரை ஓர் சிறந்த கவிஞராகவும் அடையாளம் காட்டுவது காமத்துப்பாலே எனலாம். அத்தகைய சிறப்பு வாய்ந்த காமத்துப்பால் பாக்களில் சிலவற்றைக் குறித்துச் சிந்திப்பதும், காட்சிப்படுத்துவதுமே இக்கட்டுரையின் நோக்கம்.*

*தலைவன் தலைவி*

*தலைவன் தலைவியைக் கண்டு காதல் கொள்கின்றான். அவளுக்கும் அவன்மீது அன்பு தோன்றுகின்றது. ஆயினும், பெண்மைக்கே உரிய நாணம் தடை போடுவதால் தலைவன் தன்னை நோக்கும் போது நிலத்தை நோக்குகின்றாள். அவன் தன்னைப் பார;க்காத தருணத்தில் அவனை நோக்கி மெல்லப் புன்னகைத்துக் கொள்கின்றாள், இதனையே,*

*"யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்*
*தான்நோக்கி மெல்ல நகும் " (கு-1904)*

*என்கிறார; வள்ளுவப் பேராசான். இக்குறளைப் படித்தவுடனே நமக்கு ஓர் திரைப்படப் பாடல் நினைவுக்கு வருகின்றது.*

*"உன்னை நான் பார;க்கும் போது மண்ணை நீ பார்க்கின்றாயே,*
*விண்ணை நான் பார்க்கும் போது என்னை நீ பார்க்கின்றாயே"..!*

*என்ற கண்ணதாசனின் பாடல் வரிகள் தானே ஞாபகம் வருகிறது.*

*இதோ காதல் வயப்பட்ட தலைவனும், தலைவியும் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர் அங்கே வாய்ச்சொற்களுக்கு வேலையேயில்லாமல் போய்விடுகின்றது. கண்கள் பேசாதவற்றையா வாயும் எழுத்துக்களும் பேசிவிடப் போகின்றன?*

*"கண்ணொடு கண்இனை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்*
*என்ன பயனும் இல" (கு- 1100)*

*வெண்மதியையும், பெண்ணின் முகத்தையும் ஒப்புமைப்படுத்திப் பாடாத தமிழ்ப் புலவர்களோ, கவிஞர்களோ இல்லை என்றே கூறலாம். வள்ளுவரும் இதற்கு விதிவிலக்கல்ல.*

*இரவு நேரத்தில் தன் காதலியைச் சந்திக்க வருகின்ற ஓர் தலைவன் வானத்தை அண்ணாந்து பார்க்கின்றான். அங்கே அழகான முழுநிலாக் காட்சியளிக்கின்றது. அந்நிலவோடு தன் காதலியின் முகத்தை ஒப்பிட்டுப் பார்க்கின்றான். உடனேயே ஒரு முடிவுக்கு வந்தவனாக நிலவைப் பார்த்து,*

*'உன்னோடு என் காதலியின் எழில் முகத்தை ஒப்பிடுவதே தவறு. நீயோ களங்கம் உடையாய் அதுமட்டுமன்று, தேய்கின்றாய் .... வளர்கின்றாய், ஆனால் என் காதலியின் முகமோ களங்கம் சிறிது மற்றது"*

*என்று தன் காதலிகுப் புகழ்மாலை சூட்டுகின்றான். சுவையான அத்திருக்குறள் இதோ...*

*"அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல*
*மறுவுண்டோ மாதர் முகத்து " (கு-1117)*

*அத்தோடு விட்டானா? நிலவே ... நீ என் தலைவியின் முகத்தை ஒத்திருக்க விரும்பினாயானால் இப்படி நாணம் இல்லாமல் எல்லோரும் காணும்படி வானில் தோன்றாதே என்று வேறு கூறுகின்றான் புதுமையான வேண்டுகோள் இல்லையா?*

*"மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்*
*பலர;காணத் தோன்றல் மதி " (கு-1119)*

*இல்லறம்*

*இப்போது உள்ள காலக்கட்டத்தில் கணவனும், மனைவியும் தாங்கள் நல்ல நண்பர்கள் போலப் பழகுவதாகக் கூறிக்கொள்கின்றார்கள் அல்லவா? இதற்கு முதன் முதலில் அடித்தளம் போட்டுக் கொடுத்தவர் நம் வான்புகழ் வள்ளுவரே.*

*தலைவன் ஒருவன் தனக்கும் தன் தலைவிக்குமுள்ள உறவைப் பற்றிக் 'காதற் சிறப்புரைத்தல்"; என்ற அதிகாரத்தில் பேசும்போது இவ்வாறு குறிப்பிடுகின்றான்.*

*“உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன*
*மடந்தையொடு எம்மிடை நட்பு ” (கு-1122)*

*மாந்தர்களே இத்தலைவியொடு எனக்குள்ள நட்பு எப்படிப்பட்டது தெரியுமா? உடம்புக்கு, உயிருக்கும் உள்ள தொடர;பு எப்படிப்பட்டதோ அப்படிப்பட்டது என்கின்றான். இங்கே உறவு என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் நட்பு என்ற சொல்லை அவன் பயன்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. காதலுக்கு இதைவிட அருமையான விளக்கம் எதனையும் கொடுத்துவிட முடியாதென்றே தோன்றுகின்றது.*

*தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள காதல் ஊரிலுள்ளோர்க்குத் தெரிந்துவிடுகின்றது. அவர்கள் அலர் (காதலர்களைப் பொது இடங்களில் காது படப் பழித்தல்) கூறத் தொடங்குகின்றனர். அதனைக் கண்ட தலைவி மிகவும் வேதனையுற்று,*

*‘நான் என் காதலரைக் கண்டதென்னவோ ஒருநாள் தான். ஆனால் அந்த அலரோ*
*திங்களைப் பாம்பு கொண்ட செய்தி போல் ஊரெங்கும் பரவிவிட்டதே’’*

*என வருந்துகின்றாள்.*

*கண்டது மன்னும் ஒருநாள் அலர; மன்னும்*
*திங்களைப் பாம்புகொண் டற்று (கு-1146)*

*தலைவனையே எதிர்பார்த்துக் காத்திருப்பதனால் தலைவியின் அழகமை தோள்கள் மெலிந்தன. உடலில் பசலை படர;ந்தது. கை வளையல்கள் கழன்றன. அழுது அழுது கண்கள் ஒளியிழந்தன. தலைவன் சென்ற நாட்களைக் கோடிட்டுக் குறித்துக் கொண்டே வருவதனால் விரல்களும் தேய்ந்தன. இதனையே வள்ளுவப் பெருந்தகை,*

*வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற*
*நாளொற்றித் தேய்ந்த விரல் (கு-1261)*

*என்கிறார் பிறகு அவள் தன்னைத்தானே தேற்றிக் கொள்கின்றாள்.*

*‘என் இனிய நெஞ்சே நீ தலைவனை உன்னிடத்தில் தானே வைத்திருக்கின்றாய். பின்பு*
*ஏன் அவர் பிரிந்து சென்றுவிட்டார் என எண்ணி உடலை வருத்திக் கவின் இழந்து*
*மெலிந்து வருகின்றாய்’’ என வினவிக் கொள்கின்றாள்.*

*சில காலத்திற்குப்பின், தலைவனும் தலைவியும் மறுபடியும் ஒன்றாய் இணைகின்றனர் அவர்கள் மகிழ்ச்சியாய்ப் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் தலைவனுக்குத் தும்மல் வருகின்றது. அவன் தும்முவதைக் கண்ட தலைவி வாழ்க என்று வாழ்த்துகின்றாள். உடனேயே, யார் உம்மை நினைத்தார்கள், ஏன் உமக்குத் தும்மல் வந்தது என தலைவனைப் பல கேள்விகள் கேட்டு, அழுது அவனோடு ஊடல் கொள்கின்றாள். இன்றும் நம் கிராமங்களில் யாருக்காவது தும்மல் வந்தாலோ அல்லது புரையேறினாலோ அவ்வாறு செய்பவர்களை யாரோ நினைக்கின்றார்கள் என்று எண்ணும் வழக்கம் உள்ளது தானே? இவ்வழக்கம் வள்ளுவர் காலந்தொட்டு இருந்து வருகின்றது போலும்.*

*“வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்*
*யாருள்ளித் தும்மினீர் என்று’’ (கு-1317)*

*இவ்வாறு காமத்துப்பாலில் படித்து இன்புறத்தக்க பல குறப்பாக்கள் குவிந்து கிடக்கின்றன. சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களின் சுருங்கிய வடிவாகவே காட்சியளிக்கின்றன. இக்குறட்பாக்கள் எனலாம். களவு என்று சொல்லப்படுகின்ற காதல் வாழ்வையும், கற்பு என்று அறியப்படுகின்ற இல்லற வாழ்வையும் திருவள்ளுவப் பெருந்தகை சுவைபட நகர;த்திச் செல்லும் பாங்கு படித்து இன்புறத்தக்கது.*

*வள்ளுவனின் காதல்*

*உலகத்திலுள்ள அத்தனை ஜீவன்களுக்காகவும் ஒன்றரை அடியில் குறள் எழுதிய திருவள்ளுவர் ஒரே ஒரு ஜீவனுக்காக மட்டும் நான்கடியில் ஒரு பாட்டு எழுதியுள்ளார் தெரியுமா? யார் அந்த பெருமைக்குரிய ஜீவன் ....? அவரது மனைவி வாசுகி தான்! அந்த அம்மையார் தனது கணவரின் செயல்பாடுகள் குறித்து வாழ்நாள் முழுவதும் விமர;சித்ததே இல்லை. அவர் செய்தால் எல்லாம் சரியாகத்தான் இருக்கும் என்று நினைப்பவர். தன் கணவர் சாப்பிடும் போது கையில் ஒரு ஊசி வைத்திருப்பார் கீழே விழும் சோறை எடுத்து தண்ணீர் உள்ள ஒரு கிண்ணத்தில் போடுவார். தண்ணீரை வடித்து விட்டு. மீண்டும் அந்த சோற்றை சாப்பாட்டுடன் கலந்து கொள்வார் இதற்கான காரணத்தை அந்த அம்மையார் இறக்கும் தருவாயில் தான் கணவரிடம் கேட்டாராம். வள்ளுவரின்*

*இல்லத்துக்கு துறவி ஒருவர் வந்தார் அவர்கள், இருவரும் பழைய சாதம் சாப்பிட்டனர் அப்போது வள்ளுவர் வாசுகியிடம், சோறு சூடாக இருக்கிறது. விசிறு என்றார்.*

*பழைய சோறு எப்படி சுடும்? அந்த அம்மையார் கேள்வியே கேட்கவில்லை, விசிற ஆரம்பித்து விட்டார் இப்படி, கணவருடன் வாதம் செய்யாமல் விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம் கொண்டிருந்தார் அந்த கற்புக்கரசி ஒருமுறை கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார் வள்ளுவர் அவரை அழைக்கவே, கயிறை அப்படியே விட்டு விட்டு வந்தார். குடத்துடன் கூடிய அந்தக் கயிறு அப்படியே நின்றதாம். இப்படி ஒரு மனைவி கிடைத்தால், அந்தக் கணவன் கொடுத்து வைத்தவன் தானே? அந்த அன்பு மனைவி ஒரு நாள் இறந்து போனார்.*

*"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்*
*பெருமை உடைத்து இவ்வுலகு" (கு-336)*

*என்று ஊருக்கே புத்தி சொன்ன அந்தத் தெய்வப்புலவரே, மனைவியின் பிரிவைத் தாங்காமல் கலங்கி விட்டார் நேற்றிருந்தவர் இன்றைக்கு இல்லை என்பது தான் இந்த உலகத்திற்கே சொல்லக் கூடிய இந்தக் குறளின் பொருள். ஆக, தனது கருத்துப்படி, அந்த அம்மையாரின் ஆன்மாவிற்காக வேண்டி அவர் தன்னை மாற்றிக் கொண்டாலும் தன் மனைவியின் பிரிவைத் தாளாமல்,*

*அடியிற்கினியாளே அன்புடையாளே*
*படிசெல் தவறாத பாவாய்-அடிவருடி*
*பின்தூங்கி முனனெழும்பும் பேதாய்*
*இனிதாய் என் தூங்கும் என்கண் இரவு*

*என்ற ஒரு நாலு வரி பாட்டெழுதினார் அடியவனுக்கு இனியவளே! அன்புடையவளே! என் சொல்படி நடக்கத் தவறாத பெண்ணே! என் பாதங்களை வருடி தூங்கி முன் எழுபவளே! பேதையே! என் கண்கள் இனி எப்படித்தான் இரவில் தூங்கப் போகிறதோ! என்பது பாட்டின் உருக்கமான பொருள். காமத்துப்பாலின் ஒவ்வொரு குறளும் காதலை அணுவணுவாக உணர;ந்து எழுதப்பட்டது என்பதற்கு வள்ளுவன் வாசகியின் வாழ்க்கை ஒன்று போதுமே...!*

*நிறைவாக*

*வள்ளுவம் எதை சொல்லாமல் விட்டுவிட்டது சொல்லுங்கள்... மனிதன் எப்படி வாழவேண்டும், எப்படி வாழக்கூடாது என்று அனைத்தையும் சொல்கிறது வள்ளுவத்தை பின்பற்றுங்கள். இன்று சிறுசிறு கருத்து வேறுபாடுகளுக்கு கூட நீதிமன்ற வாசலில் நிற்கும் தம்பதியர;, வாழ்க்கையை ஒரு விளையாட்டாக எண்ணுகின்றவர;கள் வள்ளுவத்தின் வழியில் வாழ்ந்து பாருங்கள் வாழ்க்கையை நேசிக்க கற்றுக் கொள்வீர்கள்.*

*காதல் என்பது இருபாலருக்குண்டான இனக்கவர்ச்சியென்று அது வாழ்வியல். இரு உள்ளங்களின் சங்கமம் வாழ்தலில் மட்டுமே உணரக்கூடிய தத்துவம் எதிர்பார்ப்புகள் இல்லாத எந்த உறவுக்குமே அழிவென்பது இல்லை காதலின் வெளிப்பாடு அன்பு மட்டுமே. "காதல் நேசிப்பதில் இல்லை வாழ்ந்துக்காட்டுவதில் இருக்கின்றது"..!*

********* ********* ********** ********* ********* ********** ********** **********